முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் முகாம் அலுவலகத்தில் தலைமை நிலையச் செயலாளர், துறைமுகம் காஜா தமது பிறந்த நாளை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்து கோரிக்கை மனு அளித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், அமீரக தி.மு.க. அமைப்பாளர் துபாய் மீரான் இந்திய அரசின் துணைத் தூதரக விருது பெற்றமைக்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, திமுக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் நடைபெற்ற தலைவர்72 – கழக அணிகளுக்கிடையேயான மாபெரும் கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த கழக விளையாட்டு மேம்பாட்டு அணி, இரண்டாவது இடத்தைப் பிடித்த தகவல் தொழில் நுட்ப அணி, மூன்றாவது இடத்தைப் பிடித்த இளைஞர் அணி மற்றும் பெண்கள் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்த தகவல் தொழில் நுட்ப அணி, இரண்டாவது இடத்தைப் பிடித்த மகளிர் அணி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி அவர்களுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும் தொழில்துறை அமைச்சருமான முனைவர் TRB ராஜா, கழக மகளிர் அணி துணைச் செயலாளரும் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவருமான திருமதி.குமரி விஜயகுமார், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஆர்.பார்த்திபன், தனுஷ் எம்.குமார், ஆர்.கோபால்ராம், எஸ்.கார்த்திக், மு.வாசிம்ராஜா, சுரேஷ் ஜே.மனோகரன், செல்வி.நிவேதா ஜேசிகா, வே.கௌதமன், நா.ஆனந்த், பி.கே.பாபு, முகமது இஷ்ரத் ஆகியோர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி நடத்திய தலைவர் 72 கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலிடத்துக்கான கோப்பையை வென்ற விளையாட்டு மேம்பாட்டு அணி, இரண்டாம் இடம் பிடித்த தகவல் தொழில்நுட்ப அணி, அதே போல மகளிர் பிரிவில் முதல் இடம் பிடித்த தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்த சகோதரிகள் மற்றும் 2ஆம் இடத்தை பிடித்த மகளிரணியினரை நேரில் வாழ்த்தினார். உடன் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் பலர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.02.2025) முகாம் அலுவலகத்தில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸ் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.2.2025) நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் சந்தித்து, 2019 முதல் 2024 ஆண்டுகள் வரையிலான தனது தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உரைகள் அடங்கிய "Connecting People and Policy – A Legislative Voice" என்ற ஆங்கில புத்தகத்தை வழங்கினார்.

#GetOutModi - எக்ஸ் சமூகவலைதளத்தில் டிரெண்டிங்!

சென்னை, பிப். 21-

GetOutModi என்ற Hashtag எக்ஸ் சமூகவலைதளத்தில் தற்போது டிரெண்ட் ஆகி வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசு தமிழ்நாட்டை அனைத்து வகைகளிலும் வஞ்சித்து வருகிறது. இதனால் அவர் தமிழ்நாடு வரும்போதெல்லாம் Go Back Modi என்ற Hashtag சமூகவலைத்தளங்களில் டிரெண்டாகும். இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு நிதி அளிக்காத பிரதமர் மோடிக்கு இனி Get Out Modiதான் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விமர்சித்திருந்தார். அதன்படி, தற்போதே சமூகவலைதளங்களில் இந்த வார்த்தை டிரெண்ட் ஆகி வருகிறது. குறிப்பாக எக்ஸ் சமூகவலைதளத்தில் Get Out Modi என்ற Hashtag டிரெண்ட் ஆகி வருகிறது. தி.மு.க. வினர், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் Get Out Modi என்ற Hashtagஐ டிரெண்ட் ஆக்கி வருகின்றனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உற்ற நண்பர் – முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தாத்தாவின் மகள் வழி கொள்ளுப்பேத்தியும், டி.எஸ்.அண்ணாதுரை – சரஸ்வதி இணையரின் மகளுமான மருத்துவர் எஸ்.ஏ.வித்யாலெட்சுமி – காவல்துறை துணை கண்காணிப்பாளர் சகோதரர் டி.விக்னேஷ் இணையரின் திருமணத்தை திருச்சியில் நேற்று முன்தினம் நடத்தி வைத்தார். மணமக்கள் இருவரும் வாழ்வில் எல்லா வளமும் பெற்று தமிழ் போல் வாழ்கவென வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி., கழகத்தினர் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (20.02.2025) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், எடையாளர்கள் மற்றும் காவலர்களைப் பணியின் போது பொதுமக்கள் எளிதாக அடையாளம் காணும் வகையில் 4710 பணியாளர்களுக்கு தலா இரண்டு சீருடைகள் வழங்கிடும் அடையாளமாக, 10 பணியாளர்களுக்கு சீருடைகளை வழங்கினார். இந்நிகழ்வில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சத்ய பிரத சாகு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனத்திற்கு வருகை தரும்

தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி, பிப். 21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்குச் செல்லும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கூறுகையில்கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.2.25, மற்றும் 22.2.25ஆகிய இரு நாட்கள் கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்கு செல்கிறார்.

இன்று 21. 2 .2025 பகல் 10.00 மணிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் வழியாக கடலூர் மாவட்டத்திற்குச் செல்லும் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் வடக்கு

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தலைமையில் திண்டிவனம் புதுச்சேரி செல்லும் வழியில் உள்ள E.Bஅலுவலகம் அருகில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், திமுக மூத்த நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.